**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

S.C. No.38 of 2025

Deposition of P.W.1

Name of the Witness: திரு.கோவிந்தன்

Date : 06.04.2026

**மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1,7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என் புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் போலீஸ் என்னை விசாரிக்கும்போது சொல்லி உள்ளேன். நான் புகார் வாக்குமூலத்திலும் போலிசார் விசாரணையில் சொல்லி உள்ள சங்கதிகளைத்தான் நீதிமன்ற விசாரணையிலும் சொல்லி உள்ளேன். புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் லோக் அதாலத் மூலமாக வழக்கறிஞர் கோவிந்தசாமி சொத்தை எடுத்து கொண்டதாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. லோக் அதாலத் மூலமாக சொத்துக்கள் வழக்கறிஞர் கோவிந்தசாமிக்கு சட்டப்படியாக போய் சேர்ந்துவிட்டதால் இந்த விவரத்தை புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் சொன்னால் புகாரை எடுத்து கொள்ள மாட்டார்கள் என்பதால்தான் நான் சொல்லாமல் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. என்னால் கொலை செய்யப்பட்டதாக சொல்லப்படும் சண்முகத்திற்கு சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல,

எனக்குத்தான் மொத்த சொத்தும் பாத்தியம். எனக்கு சொத்தில் உரிமை இருந்திருந்தால் லோக் அதாலத் மூலமாக சொத்து கிரயம் செய்திருக்க முடியாது என்றால் சரியல்ல. மொத்த சொத்தில் 3 நபர்களுக்கு பாத்தியமுள்ள சொத்தை என் பெயரில் பிடித்து கொண்டு அராஜகம் செய்து யாரேனும் பாகம் கேட்டு வந்தால் அவரை கொலை செய்வது என் வழக்கம் என்றால் சரியல்ல.

2) மேற்படி சொத்து சம்மந்தமாக 1ம் எதிரி வழக்கறிஞர் கோவிந்தசாமி அலுவலகத்திற்கு செல்லும் போது மேற்கண்ட எதிரிகள் அனைவரையும் நான் அலுவலகத்தில் பார்த்துள்ளேன். என்னை அவர்களால் தெளிவாக அடையாளம் காட்ட முடியும். புகாரில் ரவி என்பவர் ஓட்டி கொண்டு டிரைவர் அருகே வழக்கறிஞர் கோவிந்தசாமியும் பின்புற சீட்டில் கோவிந்தராஜ் என்பவரும் உட்கார்ந்து கொண்டு வந்தார்கள் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் என்னுடைய முதல் விசாரணையில் 4ம் எதிரி கோவிந்தராஜ் காரின் முன் சீட்டில் உட்கார்ந்து இருந்ததாக அடையாளம் காட்டி உள்ளேன் என்றாலும் ஆனால் அதற்கு முரணாக 4ம் எதிரி நீதிமன்ற முதல் விசாரணையில் காரின் சீட்டில் முன்பக்கமாக உட்கார்ந்ததாக அடையாளம் காட்டப்பட்டுள்ளது. புகாருக்கும், முதல் விசாரணைக்கு

முன்னுக்கு பின் முரணாக உள்ளதால் நான் எதிரிகளை அடையாளம் காட்டியது ஏற்புடையதாக இல்லை என்றால் சரியல்ல.

3) நீதிமன்ற முதல் விசாரணையில் காரில் இருந்து 1ம் எதிரி கோவிந்தசாமியின் செல்போன்களை எடுத்து போலீசாரிடம் ஒப்படைத்தேன் என்று கூறியுள்ளேன். மாதிரி வரைபடத்தில் செல்போன் கீழ் இருந்து எடுக்கப்பட்டதாக குறிப்பிட்டிருந்தால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் நீதிமன்ற முதல் விசாரணையில் சொல்லி உள்ள விவரங்கள் உண்மையானதுதான். என்னால் கொடுக்கப்பட்ட புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் பொய்யானது என்றாலும் அது பொய்யாக என்னால் எதிரிகள் மீது கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

4) நான் புகாரில் கோவிந்தசாமி பெயரில் பத்திரம் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லிவிட்டு நீதிமன்ற முதல் விசாரணையில் 2 பேர் மூலம் பத்திரம் ஏற்பட்டதாக சொல்வது சரியல்ல. லோக் அதாலத் மூலமாக சொத்திற்கு உரிமை பெற்று எதிரி கோவிந்தசாமி சொத்தை விற்பதில் எனக்கு ஆட்சேபணை செய்ய எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் புகாரில் கிரய பத்திரம் எழுதி கொடுக்க 1ம் எதிரி கோவிந்தசாமி மறுத்துவிட்டார் என்று கூறிவிட்டு முதல் விசாரணையில் அதற்கு

முரணாக நான் கேட்கும்போதெல்லாம் செய்து கொடுப்பதாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

5) 3 1/2 ஏக்கர் நிலத்தில் 10 சென்ட் நிலத்தை நான் கொடுத்துவிட்டதால் மீதி உள்ள சொத்தை அளந்து ஸ்கெட்ச் போட்டு கொடுத்துவிட்டார் என்ற விவரம் போலீஸ் விசாரணையிலும் புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகாரில் தலை மற்றும் முகத்தில் எனக்கு காயம் ஏற்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற முதல் விசாரணையில் எனக்கு இடது பக்கம் விழுந்ததில் தோள் பக்கம் இறங்கிவிட்டதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எனக்கு எதிரிகளால் ஆபத்து ஏற்பட்டிருந்தால் எனக்கு எங்கு அடிபட்டது என்று தெளிவாக சொல்லி இருப்பேன் என்றால் சரியல்ல.

6) நான் புகாரில் என்னுடைய போனில் இருந்து என் மகனுக்கு போன் செய்ததாக சொல்லிவிட்டு பின்பு அதை மாற்றி நீதிமன்ற முதல் விசாரணையில் என் போனில் காசு இல்லை என்பதால் சசிகுமாரின் மகன் போனிலிருந்து பேசியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு அடிபட்ட உடன் அக்கம் பக்கம் இருப்பவர்கள் ஓடிவந்து பார்த்தார்கள். அந்த அக்கம் பக்கம் இருந்தவர்களுக்கு தான் உண்மை தெரியும் என்றால் சரியல்ல.

7) லோக் அதாலத் மூலமாக கோவிந்தசாமி தீர்வு பெற்றுவிட்டதால் சட்டப்படியாக நடவடிக்கைதான் நான் எடுக்க வேண்டும் என்றாலும் அவரிடம் இருந்து சொத்தை பறிப்பதற்காக பொய்யாக இந்த வழக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மோசடியாக சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சண்முகத்திற்கு பாத்தியமான சொத்தைத்தான் 1ம் எதிரி கோவிந்தராஜன் வாங்கி உள்ளார் என்றாலும் சண்முகத்தின் மகனான அலெக்ஸ் பாண்டியனிடம் சட்டப்படியாக கிரயம் பெற்றுள்ளார் என்றாலும் அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.

8) சொத்தில் 3 பாகம் உள்ளது என்றாலும் 3 பாகம் எனக்கே உரிமை உள்ளது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. குறுக்கு வழியில் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னால் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டப்பட்ட 4ம் எதிரி கோவிந்தராஜ் 80 % கண் பார்வையற்றவர் என்றால் அவருக்கு சம்பவத்தின்போது வண்டியிலிருந்து கீழே விழுந்து பார்வை குறைபாடு ஏற்பட்டது. சம்மந்தமே இல்லாத 4ம் எதிரி உள்ளே இருக்க வேண்டும் என்பதற்காக அவர் மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதிகாலையில் நான் எப்படி சந்தைக்கு

போகிறேனோ தோஸ்த் வண்டியும் காரும் எதர்ச்சியாக விபத்து ஏற்பட்டதை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக வழக்கு கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல எந்த சம்பவத்திலும் எதிரிகள் ஈடுபடவில்லை என்பதால்தான் அவர்களை அடையாளம் காட்ட முடியாமல் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் உண்மை இல்லை என்பதால்தான் நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் உண்மையிலேயே செல்போன் எடுக்கப்பட்டிருந்தால் காரிலிருந்து எடுக்கப்பட்டதா கீழிருந்து எடுக்கப்பட்டதா என்று தெளிவாக சொல்லி இருப்பேன் என்றும் உண்மை இல்லாத பட்சத்தில்தான் முன்னுக்கு பின் முரணாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி கோவிந்தசாமி சொத்தை தகுந்த நபரிடம் சரியான விலைக்கு வாங்கியுள்ளார் என்றாலும் அவருடைய கிரய பத்திரம் சட்டப்படி செல்லும் என்றாலும் சரியல்ல. 1ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (3,4,6 எதிரிகள் தரப்பில்)</u>**

என் மருமகன் பெயர் நாகராஜ். அவர் பாலக்கோட்டில் எர்ரனஹளள்ளி பஞ்சாயத்தில் உள்ள டவுனில் தள்ளாபுரி பக்கம் வீடு கட்டி குடியிருக்கிறார்.

என் மருமகன் நாகராஜ் இந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். போலிஸ் முன்னிலை படுத்தியிருக்கும் இந்த வழக்கிற்கும் நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ள சங்கதிகளுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் எந்த தவறும் செய்யவில்லை என்றாலும் அவர்கள் நிரபராதி என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

S.C. No.38 of 2025

Deposition of P.W.4

Name of the Witness: திருமதி.துளசி

Date : 06.04.2026

**மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என் கணவர் அவருடைய செல்லில் இருந்து என்னை வழக்கறிஞர் அடித்துவிட்டதாக சொன்னார். அந்த இடத்திற்கு நான் போகும்வரை அங்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. அந்த இடத்திலிருந்து அக்கம் பக்கத்தினருக்குத்தான் அங்கு என்ன நடந்தது என்று தெரியும் என்றால் சரியல்ல. நான் போகும்போது என் கணவர், நான், என் மகன் காரில் பால் மாட்டி கொண்டு வரும் பையன் அவர் மட்டும் தான் இருந்தார். பிறகு ஊர்காரர்கள் எல்லாரும் வந்தார்கள். நான் போகும்போது ஊர்காரர்கள் இருந்தார்கள், யார் யார் என்று எனக்கு தெரியாது. அந்த ஊர்காரர்களுக்குத்தான் உண்மை தெரியும் என்றால் சரியல்ல. சொத்தை எதிரி கோவிந்தசாமி சட்டப்படியாக வாங்கி உள்ளார் என்றாலும் சொத்தை குறுக்கு வழியில் அடைய வேண்டும் என்பதற்காக என் கணவர் பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (3,4,6 எதிரிகள் தரப்பில்)</u>**

**நான் சொல்லி உள்ள விவரங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை – இல்லை**

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI</u>**

S.C. No.38 of 2025

Deposition of P.W.5

Name of the Witness: திரு.பெரியசாமி

Date : 06.04.2026

**<u>மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) மொத்த சொத்து 13 ஏக்கர் 95 சென்ட். என் அப்பாவின் தாத்தா தாதப்பன், மாரியப்பன், கணக்கன் பெயரில் உள்ளது. மேற்கண்ட சொத்து முழுவதும் 3 நபர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். 3 நபர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை 9 ஏக்கர் நாங்களே பிடித்து வைத்திருந்தோம் என்றால் சரியல்ல. அந்த 9 ஏக்கரில் 6 ஏக்கர் சொத்து தற்போது வழக்கறிஞர் கோவிந்தசாமி பெயரிலும் பாக்கி 3 ஏக்கர் 30 சென்ட் எங்கள் பெயரில் பதிவு செய்து கொடுப்பதாக சொன்னார்.

2) கோவிந்தசாமி பெயரில் உள்ள சொத்தை யார் பெயரில் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. எனக்கு சொத்து எப்படி பாத்தியம் என்று தெரியாது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சட்டப்படியாக லோக் அதாலத் மூலமாக வாங்கிய சொத்தில் எங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று 1ம் எதிரி கோவிந்தசாமிக்கு எந்த

நிர்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் அப்பா விபத்தில் கீழே விழுந்துவிட்டார் என்ற தகவல் என் அப்பா நம்பரிலிருந்து என் போனிற்கு போன் வந்தது. என் அம்மா பேசினார். என் அம்மாதான் இந்த விவரத்தை என்னிடம் சொன்னார். எனக்கு நேரடியாக தெரியாது.

3) நான் சம்பவ இடத்திற்கு போகும்போது அங்கு அந்த ஊர்காரர்கள் இருந்தார்கள். அங்கு இருப்பவர்களுக்குத்தான் சம்பவத்தை பற்றி உண்மை தெரியும் என்றால் சரிதான். சொத்தை எதிரி கோவிந்தசாமி சட்டப்படியாக வாங்கி உள்ளார் என்றாலும் சொத்தை குறுக்கு வழியில் அடைய வேண்டும் என்பதற்காக என் அப்பா பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல (மேற்படி குறுக்கு விசாரணையை 3,4,6 எதிரிகள் தரப்பில் ஏற்று கொண்டார்கள்)

மறு விசாரணை – இல்லை

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.